1973 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு அல்ல. போர்டு ஆப் ரெவினியுதான் சிபாரிசு செய்திருக்கிறது. ரெவினியூ போர்டு மெம்பர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் கொடுத்த அறிக்கையின்பேரில் தான் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது.

Bridge works in Ambasamudram area

* 91 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the stage at which the construction of the bridges across Gatana river and Vowal Odai in Ambasamudram in Tirunelveli district stands?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ்விரு பால வேலைகளுக்கும் 1971-ம் ஆண்டு அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வேலைகளின் திருத்திய மதிப்பீடுகள் அரசு ஒப்புதலுக்காகத் தலைமைப் பொறியர் தயாரித்துக் கொண்டிருப்பதால் இன்னும் இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

சிவகெங்கைசெட்டி ஊரணி

* 92 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கையில் உள்ள செட்டி ஊரணி கரையை உயர்த்தி ஆழப் படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. தேவேந்திரன்: தலைவர் அவர்களே, 16, 17 ஆண்டுகளுக்கு முன்பு அங்கே தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு 21 மைல் சுற்றளவிலே இருந்தாலும் மக்கள் செட்டி ஊரணிக் கரையிலேயிருந்து குடிநீர் எடுத்துக்கொண்டு போனார்கள். அந்தப் பகுதிக்கு மிக முக்கியமானது இந்த ஊரணி. எனவே மறுபடியும் பரிசீலித்து, அந்த செட்டி ஊரணிக் கரையை ஆழப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, சிவகங்கை நகராட்சிக்குச் சொந்தமான செட்டி ஊரணிக் கரை ஏறத்தாழ 115 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. அதில் தண்ணீர் தேங்கி இருக்கும் பகுதியின் அளவு